பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 06 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுகாதார உள்கட்டமைப்பு மேம்பாட்டை அனைத்து மாநிலங்களும் துரிதப்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. **CBSE** 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளை இரண்டு முறை நடத்துவதன் மூலம் மாணவர்களுக்கு தேர்வு குறித்த மன அழுத்தம் குறையும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. வேலூர் மாவட்டத்தில் ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் 21 ஆயிரத்து 776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் முறையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று மாலை தொடங்கி வைத்தார்.

4. பில்லூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், உபரிநீர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுவதால் அங்கு கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

5. நான்கு நாடுகள் பங்கேற்ற ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்று 3ஆம் இடத்தைப் பிடித்தது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

சுகாதார உள்கட்டமைப்பு மேம்பாட்டை அனைத்து மாநிலங்களும் விரைவுபடுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரம், சுரங்கம், ரயில்வே, நீர்வளம் உள்ளிட்ட துறைகளின் பணி முன்னேற்றங்கள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்காக மாநிலங்களுக்கு சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்த பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கட்டமைப்பு இயக்கம் பொன்னான வாய்ப்பை அளிப்பதாக கூறினார்.

இதற்காக முன்னோடி மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஏழை மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு தரமான சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

திட்டப் பணிகளை உரிய நேரத்தில் நிறைவு செய்யுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இதில் ஏற்படும் தாமதம் அதிக செலவினங்களுக்கு வழிவகுப்பதாகவும், உரிய நேரத்தில் அத்தியாவசிய சேவைகள் மக்களுக்கு கிடைப்பதில் தடை ஏற்படும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

**CBSE** 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் அடுத்த ஆண்டு முதல் இரண்டு முறை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்நடவடிக்கை மாணவர்களுக்கு தேர்வு குறித்த மன அழுத்தத்தை குறைக்கும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் கல்வியை மகிழ்ச்சியுடன் கற்பதற்கான சூழலை இது ஏற்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய கல்வி நடைமுறைகளுக்கு ஏற்பவும் மாணவர்களுக்கு உகந்ததாக அமையும் வகையிலும் தேசிய கல்விக் கொள்கையின் பரிந்துரையின்படி இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

<<<<>>>>

வேலூர் மாவட்டத்தில் ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் 21 ஆயிரத்து 776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் முறையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று மாலை தொடங்கி வைத்தார்.

வேலூரில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் 12 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை அவர் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து கெங்கநல்லூரில் நூலகத்தை திறந்து வைத்த முதலமைச்சர், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையையும் வழங்கினார்.

இன்று திருப்பத்தூர் மாவட்டம் மண்டலவாடியில் நடைபெறும் நிகழ்ச்சியில் 174 கோடி ரூபாய் மதிப்பிலான 90 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக அவர் அர்ப்பணிக்கிறார்.

அத்துடன் 60 புதிய திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேலும் சுமார் 274 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் திரு. மு.க. ஸ்டாலின் பயனாளிகளுக்கு வழங்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தூத்துக்குடியில் மத்திய அரசின் சார்பில் கட்டப்பட்டு வரும் அரசு சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்படும் என்று மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனை கட்டடப் பணிகளை நேற்று பார்வையிட்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

எட்டு தளங்களைக் கொண்ட இந்த மருத்துவமனை 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருவதாக திருமதி கீதா ஜீவன் கூறினார்.

<<<<>>>>

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே பில்லூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இதன் காரணமாக அணையில் இருந்து வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி தண்ணீர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே ஒகேனக்கல் காவிரியாற்றில் இன்று காலை 6 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 24 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்தால் இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எமது தருமபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் இருந்து கும்பக்கரை, பெரியகுளம் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய அடுக்கம்பாறை மலைச்சாலையில் மீண்டும் மண்சரிவு ஏற்படாமல் இருக்க நவீன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் பணிகளில் நெடுஞ்சாலைத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பாதுகாப்புத் துறைக்காக 2035ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதம் செலவிடுவதற்கு நேட்டோ நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

-----------

சீனாவின் கிங்டாவ் நகரில் இன்று நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

-----------

ஆபரேஷன் சிந்து நடவடிக்கை மூலம் ஈரானில் இருந்து 296 இந்தியர்களும், இஸ்ரேலில் இருந்து 224 இந்தியர்களும் நேற்று தாயகம் அழைத்து வரப்பட்டனர்.

-----------

போதைப்பொருள் பயன்பாடு, சட்டவிரோத கடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் மத்திய அரசின் சார்பில் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

-----------

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பயண அட்டைகள் வரும் செப்டம்பர் மாதம் வரை செல்லுபடியாகும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

-----------

அரியலூர் மாவட்டத்தில் மழைக்கால நோய்களுக்கான மருந்துகளை போதிய அளவில் இருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் திரு. ரத்தினசாமி மருத்துவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-----------

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கட்டப்பட்டு பகுதியில் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையில் ஒன்றரை கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டு 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

-----------

புதுக்கோட்டை மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்புக் குழு கூட்டம் ஆட்சியர் திருமதி அருணா தலைமையில் நடைபெற்றது.

-----------

காஞ்சிபுரம் மாவட்டம் தளவாரம்பூண்டி ஊராட்சியில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கி வைத்தார்.

-----------

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு தீயணைப்பு நிலையத்தில் தன்னார்வலர்களுக்கான பேரிடர் மீட்புப் பயிற்சி நடைபெற்றது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

நான்கு நாடுகள் பங்கேற்ற ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி 3ஆம் இடத்தைப் பிடித்தது.

பெர்லினில் நடைபெற்ற இதற்கான ஆட்டத்தில் இந்திய அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

-------------

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, தருண் மணப்பள்ளி, **Anmol Kharb,** ஆகர்ஷி காஷ்யப் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஆயுஷ் ஷெட்டி 21-17, 21-19 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் மேக்னஸ் ஜோகன்னஸ்சன்-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தருண் மணப்பள்ளி 19-21, 21-18, 21-18 என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் அர்னாட் மெர்க்கெல்-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் **Anmol Kharb** 16-21, 21-13, 21-19 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் தெரேசாவை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஆகர்ஷி காஷ்யப் 21-19, 21-10 என்ற செட் கணக்கில் தைவானின் **Ting Yu Liang**-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ப்ரியா - ஸ்ருதி மிஸ்ரா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

------------

100 மீட்டர் பின்னோக்கி ஓடும் போட்டியில் அரியலூர் மாவட்டம் நொச்சிகுளத்தைச் சேர்ந்த ஆறுபடையப்பா பந்தய தூரத்தை 13 புள்ளி ஐந்து நான்கு வினாடிகளில் கடந்து தமது முந்தைய சாதனையை முறியடித்தார்.

-------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருச்சி அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் மதுரை அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் நெல்லை அணி திண்டுக்கல் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>